“அமெரிக்க ஏகாதிபத்யத்துக்கு அடிபணியோம்”

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 சென்னை (8—7—50) வெளியீடு (9—7—50) இதழ் 299

மனித சக்தியின் மாண்பினை கண்டுகொண்டோம்

பொல்லாங்குகளை நீக்கிப் புதுமை பல கண்டது வட கொரியா

……………(: - :)……………

அக்கிரமத்தின் உறைவிடமாய்விட்டது தென் கொரியா

வட கொரியாவின் சிறப்புப் பற்றி பிரதமர் சென் கட்டுரை

‘டெய்லி ஒர்க்கர்’ தரும் தகவல்

“தங்களுடைய சுதந்திரத்திலும், சுய ஆட்சியிலும் அந்நியர் தலையிடுவதை கொரியா மக்கள் கொஞ்சமும் விரும்ப மாட்டார்கள். மனித உரிமையும், மனித சக்தியுமே சுதந்திரம் என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டார்கள். கொரியா மக்கள் தாங்கள் உரிமைகளை விட்டுக்கொடுத்துவிட்டு, காலனி ஆட்சியின் கீழ் இனியும் அடிமைகளாய் வாழமாட்டார்களென்பதை அமெரிக்க ஏகாதிபத்யவாதிகள் தெரிந்துகொள்ள வேண்டும்”

வடகொரியாவின் முதலமைச்சர் தோழர் கிம் இர் சென், ‘டெய்லி ஒர்க்கர்’ என்னும் கம்யூனிஸ்ட் பத்திரிகையில், 1945 ல் ஜப்பானிடமிருந்து விடுதலை பெற்ற கொரியா, எவ்வெவ்வகையில் முன்னேற்றமடைந்துள்ளது என்பதுபற்றி எழுதியிருக்கும் கட்டுரைகளில் மேற்கண்ட கருத்துக்களை அமைத்துள்ளார். அக்கட்டுரைகளில் தோழர் சென் மேலும் எழுதுவதாவது:—

கொரியாவில் ஒரு ஐக்கிய ஜனநாயக ஆட்சியை நிறுவும் நோக்கத்தோடு, கொரியா பிரிவினை ஏற்பட்டபின், கொரியாவிலுள்ள ஜனநாயக சக்திகளனைத்தையும் ஒன்று திரட்டும் பெரும் பணியில் ஈடுபட்டனர், கொரியா மக்கள்.

அம்முயற்சியில் அவர்கள் மக்கள் குழுவினை அமைக்க வேண்டியதாயிற்று. ஜப்பானிய ஆதிக்கத்தால் ஏற்பட்டிருந்த சீர்குலைவுகளை யெல்லாம் போக்கி நாட்டை சீர்திருத்த வேண்டியதாயிற்று. நிலச்சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டியதாயிற்று; மக்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டி தொழிலனைத்தையும் தேசியமயமாக்கவேண்டியதாயிற்று. ஆட்சிப்பொறுப்பினை ஏற்க தலைவர்களைத் தயார் செய்யவேண்டியதாயிற்று; ஜனநாயகக் கல்வி முறையை ஏற்படுத்தவேண்டியதாயிற்று.

கடந்த போரிலிருந்து வட கொரியாவில் தொழில் வளர ஆரம்பித்தது. உணவு சம்பந்தப்பட்ட வரையில் வட கொரியா தென் கொரியாவின் [illegible] களஞ்சியத்திடம் கையேந்தி நிற்கவேண்டிய நிலைமையிலிருந்தது. ‘பின்னர் பிரிவினை ஏற்பட்டபின்-தென் கொரியா வடகொரியாவுக்கு உணவுப் பொருள் தருவதை நிறுத்திவிட்டது. இந்நிலையில் விவசாயிகள் உற்பத்திப் பெருக்கத்தில் ஊக்கம் செலுத்திய காரணத்தால் நாங்கள் உணவுப் பிரச்னையை ஓரளவு சமாளித்துவிட்டோம் [illegible]” என்று கூறுகிறார் தோழர் சென்.

கைத்தொழிற் கல்வியை வளர்க்கும் முயற்சி ஒருபுறமிருப்பினும் மக்களிடையே காணப்பட்ட தற்குறித் தன்மையை ஓட்ட பெரு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டது.”

தோழர் சென் வடகொரியா நிலைமையையும் தென் கொரியாவின் நிலைமையையும் ஒப்பிட்டுக் கூறுகையில், மேற்கண்டவாறு வட கொரியா பலவகையிலும் முன்னேறிக் கொண்டுவரும் இதே நேரத்தில் அமெரிக்க முதலாளித்துவத்தின் காலடியில் சிக்கி கொஞ்சம் கொஞ்சமாக அடிமை வாழ்வில் ஆழ்ந்து அழிவை நோக்கி நடக்க ஆரம்பித்தது.

சிங்மான் ரீயின் தலைமையில், தென் கொரியா பாழ்பட்ட பயங்கர, பலாத்கார நாடாக ஆக்கப்பட்டுவிட்டது. அமெரிக்காவின் காலனி ஆட்சியை மக்கள் விரும்பாத காரணத்தால், தென் கொரியாவில் பிரிவினைக் கிளர்ச்சி தோன்ற ஆரம்பித்துள்ளது. இக்கிளர்ச்சி, ரீயின் ஆட்சியைக் கூட கவிழ்த்திடும் நிலைமையில் இருக்கிறது.

எனவே கொரியா மக்கள் அந்நியர் தங்களுடைய சுதந்திரத்தையும் சுய ஆட்சியையும் பறிப்பதை கொஞ்சங்கூட விரும்பமாட்டார்கள்.

கொரியா மக்கள், தங்களுடையே ஜனநாயகக் குடியரசை அடைந்துவிட்டார்கள். மனித உரிமை மனித சக்தி இவற்றின் உண்மைப் பொருளை அவர்கள் உணர்ந்து கொண்டு விட்டார்கள்.

எனவே, கொரியா மக்கள் தாம் பெற்ற வெற்றியை விட்டுக்கொடுத்து [illegible] அமெரிக்க ஏகாதிபத்திய[illegible] காலனி ஆட்சியின் கா[illegible] இடக்க இனி சம்மா[illegible] டார்கள் என்பல[illegible] [illegible]லானி [illegible]

மதச்சார்பற்ற ஆட்சியின் இலட்சணம் அம்பலமாகிறது

————(0)————

படக்காட்சிகள் மூலம் பண்டிகைகளுக்கு விளம்பரம்

பம்பாய், ஜூலை 6—

இந்தியாவில், மிகப் பிரபலமாகக் கொண்டாடப்படும் பண்டிகைகளின் கோலாகலக் காட்சிகளை, அழகாக சித்தரித்துக்காட்டும் “பண்டிகை காலம்” என்ற குண்டுப்படமொன்றை, இந்திய சர்க்கார் திரைப்[illegible] பிரிவு இப்பொழுது தயாரித்திருக்கிறது. இனிய பற்ற எழிலும், கோலையும் கொண்ட காட்சிகள் நிறைந்த இத்துப்படம் இவ்வார இறுதியில் வெளிவருகிறது.

வாஷம் முழுவதிலும் கோயில்களிலும், வீடுகளிலும் வீதிகளிலும், பொது இடங்களிலும் மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் பலவித பண்டிகைகளின் காட்சிகள், வாழ்க்கையில் மக்களுக்குள்ள உற்சாகத்தையும், சமூகத்திலும் நாட்டியத்திலும் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் நன்கு எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன

கிராமாந்திரங்களிலும் மதிக பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்படும் ஹோலி, பண்டிகை, கோகுலாஷ்டமி, விநாயகசதுர்த்தி, தஸரா, தீபாவளி ஆகியவை இப்படத்தில் இடம்பெற்றுள்ள பண்டிகைகளில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கனவாகும்.

மதச்சார்பற்ற ஆட்சியென்று இந்திய ஆட்சியாளர் அடிக்கடி பேசிவருகின்றனர். இக்காரணத்தைக் காட்டியே, வகுப்பு விகிதாசார உரிமை போன்ற மக்களின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கப் பார்க்கின்றனர். அப்படிப்பட்ட ஆட்சியாளரின் மேற்பார்வையில்தான் மேற்கண்டவாறு மதக்கருத்துக்களடங்கிய பண்டிகைகள், படக்காட்சி மூலம் பாமர மக்களிடையே விளம்பரப்படுத்தப்படுகிறது, என்னே விந்தை! மதச் சார்பற்ற ஆட்சியாளர் இத்துடன் நிற்கவில்லை. கொள்ளை[illegible] பரிபாலன பத்மநாபன் திருவிழா, மயிலாப்பூர் மகோற்சவம் வேறு பல இடங்களில் நடைபெறும் தேவி பூசைகள் முதலியவற்றையும் படம் பிடித்துக் காட்டும் அதை கண்டு அறிவுலகம் நகைக்கட்டும்.

பாகிஸ்தான் அரசியல் - திட்டம் தயாராகிறது

————(0)————

1952-ல்பொதுத் தேர்தல்

கராச்சி ஜூலை 7—

பாகிஸ்தானின் அரசியல் திட்டத்தைத் தயாரிப்பதில் பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை இவ்வாண்டு முடிவிற்குள்கூடி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிடும் என்று தெரிகிறது.

[illegible] சர்க்காருக்கும் மாகாண சர்க்கார்களுக்கும் அதிகார பிரிவினை பற்றி, அக் [illegible] டோபர் [illegible] விவாதித்து முடிவு செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

வோட்டுரிமை முதலிய விஷயங்கள் பற்றி, பொது ஜன அபிப்பிராயம் அறிய கேள்விகள் தாள்கள் வெளியிடப்படும் எனத் தெரிகிறது.

நகல் அரசியல் திட்டம், அடுத்த ஆண்டு முடிவிற்குள் நிறைவேற்றப் ப[illegible] விடும். ஆகவே, பாகி[illegible]வின் பொதுத் தேர்[illegible] 1952-ல் தான் நடைபெற[illegible]

ரூ. 80 கோடி அபேஸ்!

முன்னாள் தலைவரின் மோசடி

நியூயார்க், ஜூலை 7—

க்யூபாவின் மாஜி ஜனாதிபதி டாக்டர் ரேமன் கிராஸான் மார்டின் என்பவர், தன் நான்கு ஆண்டு பதவிக் காலத்தில், ரூ. 80 கோடிக்கு மேல் மோசடி செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார். இந்தக் குற்றத்தை நிரூபிக்கக்கூடிய சுமார் 30 தஸ்தாவேஜுகளை 6 கொள்ளைக்காரர்கள், க்யூபா கோர்ட் அறையிலிருந்து அபேஸ் செய்து ஓடிவிட்டனர்.

டாக்டர் கோமர் ஸான் மார்டின் 1944-ம் ஆண்டு முதல், 1948 வரை பிரசிடெண்டாக இருந்தாராம்.

—ருனோப்

ரஷ்யாவில் புரட்சி நேருமாம்!

லண்டன், ஜூலை 7—

ரஷ்யாவில் ஸ்லோவாகியாவிலிருந்து டாகெஸ்தான்வரை பெரும் சைன்யம் கம்யூனிசத்தை எதிர்ப்பதற்குத் தயாராக உத்திரவை எதிர்பார்த்திருப்பதாக, உக்ரைனில் மாஜி பிரதமர் ஜாரேஸ்லாவ் ஸ்டெட்கோ கூறுகிறார்.

மாடர்ன் தியேட்டர்ஸ்

மந்திரி குமாரி

…சென்னை…

பாரகன் பிராட்வே

தினசரி 3 காட்சிகள் 2-30 • 6 • 9-30 மணி

மாலை மணி

சென்னை 8—7—50 சனிக்கிழமை

கொடுமை கூடாது!

"தாய் தஞ்சையில் பிச்சை எடுக்கத் தனயன் கும்பகோணத்தில் கோதானம் கொடுத்தானும்" என்ற பழமொழிக்கிணங்க, சென்னை சர்க்கார் செயலாற்றி வருகிறது.

சொந்த நாட்டைச் சேர்ந்தவர்கள், சொந்த நாட்டிலேயே அலைந்து திரிந்து, அரைவயிறு சோறும் கிடைக்காமல் திண்டாடிக்கொண்டிருக்கும்போது, வடநாட்டு அகதிகளுக்கு வரவேற்பு அளித்து, அவர்களுக்கு வாழ்வளிக்கத் திட்டங்கள் தீட்டி வருகின்றனர், சென்னை அரசியலார்.

பழமொழி கூறுகிறபடி, தாயைத் தஞ்சையில் பிச்சை எடுக்கும்படி விட்டு விட்டுக், குடந்தைக்குச் சென்று கோதானம் கொடுத்தான் தனயன். ஆனால் தனயன் தாயைத் தஞ்சையிலேயே பிச்சை எடுக்க விட்டுவிட்டுக் கும்பகோணத்துப் புரோகிதனை அழைத்துத் தஞ்சையிலிருந்து கொண்டே கோதானம் வழங்கினால் எப்படி இருக்குமோ அப்படிப்பட்டக் கொடுமை நிலையில் சென்னை அரசாங்கம் இருந்து வருகிறது.

பர்மாவிலிருந்தும், மலேயாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும், தென் ஆப்பிரிக்காவிலிருந்தும் துரத்தித் துரத்தி அடிக்கப்பட்டு, அகதிகளாய், ஆதரவற்றவர்களாய், உயிர் தப்பி ஓடிவந்துள்ளனர், திராவிட நாட்டைச் சேர்ந்தவர்கள் சொந்தநாட்டைச் சேர்ந்தவர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாய் உலவுகிறார்கள்! எவ்வளவு வேதனை தரும்செய்தி! வெட்கம் தரும் காட்சி! வளமிகுந்த திராவிடநாட்டிலே வறுமை—பாராண்ட இனத்தின் வழிவந்தவர்கள் பராரிகளாய்த் திரிகிறார்கள்!

பர்மாவிலிருந்து வரும் அகதிகள் உருக்குலைந்த கன்னமும், ஒட்டிய வயிறும், உலர்ந்த உதடும், வறண்ட கரமும், வற்றிய உடலும், வெளியே தெரியும் நரம்பும் எலும்பும் கொண்டவர்களாய், ஓட்டை உடைசல் சாமான்களையும் கிழிந்த பாயையும் ஏந்தியவர்களாய்ச் சொந்த நாடாகிய இந்நாட்டிற்குவந்து சேர்கிறார்கள் கால்நடையாகவும், கப்பல் மூலமாகவும். அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்கான வசதியுமற்று, வேலையுமற்று, வேறு வழியுமற்று, பிச்சை எடுத்து அலைந்து [illegible] வாழும் அவலநிலையிலே [illegible] வருகிறார்கள். அப்[illegible]பட்டவர்களை எடுத்[illegible] [illegible]க்கும்படியாக, அர[illegible] [illegible]தாருக்கு எத்தனையோ [illegible] எடுத்துக் கூறியும், [illegible]யும், சுட்டி [illegible] எதும் செய்ய [illegible] மூன்வர [illegible]துமட்டுமல்ல, [illegible] வேண்டுமே [illegible] கொள்ள[illegible]வில்லை. ஆனால் பாகிஸ்தானிலிருந்து வெளியேற்றப்பட்ட அகதிகளில், பதினாயிரக்கணக்கானவர்களை வைத்துப் பாதுகாப்பு அளித்து வருகிறது சென்னை அரசாங்கம்! அவர்களுக்கு வேண்டிய உண்டி, உடை, உறையுள் ஆகியவற்றைத் தேவையான அளவுக்கு வழங்கி வருகிறது. அன்றுடம் அவர்களுக்காகும் வாழ்க்கைச் செலவுக்காகப் பஞ்சப்படியும் கொடுத்து வருகிறது. அவர்களுக்குக் கடைகள் வைத்துக் கொடுக்கவும், தொழிற்சாலைகள் ஏற்படுத்தித் தரவும், பள்ளிக்கூடங்கள் அமைத்துத் தரவும், வாழ்க்கைச் சாதனங்களைப் பெறுவதற்கு என்ன என்ன வசதிகள் செய்துதர வேண்டுமோ அவ்வளவையும் செய்துதரவும், சென்னை அரசாங்கம் முயன்று பாடுபட்டு வருகிறது. வடநாட்டு அகதிகளுக்குச் செய்வதில், ஆயிரத்தில் ஒரு பங்கு உதவி கூட, சொந்த நாட்டு அகதிகளுக்கு இந்த ஆளவந்தார்கள் செய்யவில்லை—செய்ய எண்ணமுங் கொள்ளவில்லை!

மேலும், வடநாட்டு அகதிகளுக்குத்தான் உதவி தருவோமே யொழிய, சொந்த நாட்டைச் சேர்ந்த அகதிகளுக்கு உதவி செய்வதில்லை என்று வெட்கமின்றியும், வேதனையின்றியும் சென்னை அரசாங்கத்தார் கூறிவிட்டார்கள். அதற்கு ஒரே ஒரு எடுத்துக்காட்டு போதும் என்று கருதுகிறோம். இதோ, சென்னை அரசியலார் வெளியிட்டிருக்கும் அறிக்கையே சான்று பகரும்.

"சர்க்காரிடமிருந்து தொழில் நடத்துவதற்காக கடன் உதவி பெற்ற அகதிகள் அரிசிநோய், அரிசி இவைகளை உபயோகிக்கும் ஹோட்டல்களை ஆரம்பிக்க அனுமதிக்கப்படுவார்கள். இதர அகதிகளுக்கு இந்தச் சலுகை காட்டப்படமாட்டாது."

அதுமட்டுமல்லாமல், இம்மாதிரி ஹோட்டல்கள் ஆரம்பிக்க அனுமதிக்கப்படுபவர்களுக்கு எவ்வளவு குறைந்தபடி அரிசிகொடுக்கமுடியுமோ, அவ்வளவு கொடுக்கப்படவேண்டுமென்றும் அரசாங்கம் அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது.

பெரும்பாலும் வடநாட்டு அகதிகள் தாம் தொழில் நடத்துவதற்காகச் சர்க்காரிடமிருந்து கடன் தொகைகள் வாங்கியிருக்கிறார்கள். அவர்களுக்குத் தான், சர்க்காரும் தாராளமாகக் கடன் தொகை தந்து உதவியுள்ளார்கள். அப்படிப்பட்ட அகதிகளுக்குமட்டுந்தான் ஹோட்டல்கள் வைக்க அனுமதிஉண்டாம்! ஆனால், இதர அகதிகளாக இருக்கும் சொந்த நாட்டு அகதிகளுக்கு அந்த உதவி[illegible] அனுமதிக்கப்பட மாட்ட[illegible] எவ்வளவு கொடுமை! தன்மானம், அந்த அளவுக்கா வடநாட்டிடம் அடகு வைக்கப்படவேண்டும்! சொந்த நாட்டவரை உதறித் தள்ளிவிட்டு, வடநாட்டு அகதிகளை உயர்த்திவைக்கிறார்கள்! இந்தப் பண்பு வடநாட்டவரிடம் என்றேனும் இருந்ததுண்டா? வடநாட்டிற்குக் கேடுவரும் போதெல்லாம் திராவிடம், தன் அறிவு ஆற்றல், பொருள், உழைப்பு எல்லாவற்றையும் கொடுத்துக் காப்பாற்றிவந்திருக்கிறது. ஆனால், திராவிடத்திற்கு ஒரு தீங்கு என்றால், வடநாடு திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. இதை வரலாறு நன்கு காட்டி வருகிறதே! வடநாட்டார், தென்னாட்டாரை மதிப்பதில்லை; மாறாக வெறுக்கிறார்கள். தென்னாட்டவர் வடநாட்டார்களை வெறுக்காவிட்டாலும், ஏன் மதிக்கவேண்டும்? சொந்த நாட்டு அகதிகளைப் புறக்கணித்துவிட்டு, வடநாட்டு அகதிகளை வரவேற்றுக் காப்பாற்றும் அளவுக்கு சென்னை அரசாங்கம் தன்மதிப்பு இழந்து வாழ்கிறதே! இவற்றிற்கெல்லாம் காரணம், ஆளவந்தார்களின் அடிமை எண்ணம் என்பதுமட்டுமல்லாமல், சென்னை அரசாங்கம் சுதந்திர அரசாங்கமாக இல்லாமல், வடநாட்டின் எடுபிடி அரசாங்கமாக இருப்பதேயாகும். சென்னை, மத்திய அரசாங்கத்திற்கு அடிமைப் பட்டுவிட்டது; எனவே மத்திய அரசாங்கம் கட்டளை இடுகிறது, சென்னை நிறைவேற்றித் தருகிறது.

சென்னை மத்திய அரசாங்கத்தோடு அடிமைத் தளையால் பிணைக்கப்படாமலிருந்தால், இவ்விதக் கொடுமைக் காட்சிகள் இங்கு நடைபெற வழி ஏற்பட்டிருக்காது. திராவிடமும் சுயமரியாதையோடு, தன்னம்பிக்கையோடு, தன்னறிவோடு வாழ்ந்திருக்கும்.

வடநாட்டு அகதிகளைவிரட்டி அடித்துத் துரத்திவிடாவிட்டாலுங்கூட, அவர்களிடம் காட்டும் அன்பு, பற்று, பாசம், பரிதாபம் ஆகியவற்றைச் சொந்த நாட்டு அகதிகளிடம் இந்த அரசாங்கம் காட்டக்கூடாதா?—காட்ட முடியாதா? என்றுதான் கேட்கிறோம். மனமிருந்தால், மானமிருந்தால், திறம் இருந்தால், தீரம் இருந்தால், நேர்மை இருந்தால், நெஞ்சில் உரம் இருந்தால் முடியும்! 'தன் வீட்டிற்குப் பிறகுதான் ஊர்' என்பதுபோல, சொந்த நாட்டு அகதிகளைக் காப்பாற்றிவிட்டு, மிச்சம் மீதியிருந்தால், வடநாட்டு அகதிகளைக் காப்பாற்ற முன்வரலாமே. எனவே, சொந்த நாட்டு அகதிகளின் அவதிகளைப் போக்கி, அவல நிலையைநீக்க சென்னை அரசியலார், இனியேனும் முன்வரட்டும். சொந்தநாட்டு அகதிகளைப் புறக்கணிக்கும் கொடுமை கூடாது! கூடாது!! கூடாது!!!

அரபு நாடுகள் நடுநிலைமை வகிக்கும்

டமாஸ்கஸ், ஜூலை 7—

கொரியாவில் ஏற்பட்டுள்ள போர் விஷயமாக, அரபுநாடுகள் நடுநிலைமை வகிக்கும் எனத் தெரிகிறது. சிரியா, நடுநிலைமை வகிப்பது என்று தீர்மானித்துவிட்டது. தவிர[illegible]ம், இதர அரபு நாடுகளு[illegible] [illegible]வ் விஷயத்தில் சிரியாவை[illegible] [illegible]ன பற்றும் [illegible] "அல்மிஸ்ர்" என்ற [illegible] கூறுகிறது.

மொழிப்படிப்புத்திட்டத்தை மாற்றி அமைக்கவும்

சென்னை அரசாங்கத்திற்கு எச்சரிக்கை

சென்னை, ஜூலை 4—

சென்னை அரசாங்கத்தார் பள்ளிக்கூடங்களில்ஏற்படுத்தியிருக்கும் மொழிப் படிப்புத் திட்டத்தைப் பற்றி, தோழர்கள் ஆர். கே. சண்முகம், டி. எஸ். அவினசிலிங்கம் எம். எல். ஏ., எம் ஏ. முத்தையா எம். எல். ஏ., டி. எம். நாராயணமூர்த்தி, எம். பி. சிவஞானகிராமணி, எம். ஆர். குருசாமி, ஜி. எஸ். இரத்தினசபாபதி, சி. சுப்பிரமணியம், பி. எஸ். ஜி வெங்கடசாமி, டி. ஏ. ராமலிங்கம் எம். எல். ஏ., எம். ஜி நடேசன் எம். எல். ஏ., பி. இரத்தினசாமி, வி. ஜி. முனுசாமி எம். எல். ஏ., ஓ பி ராமசாமி எம். எல். சி., பி. எஸ். தியாகராசன், என். ஆர் சாமியப்பா கே. ஏ. பி. விசுவநாதம், சோமசுந்தரபாரதி, டபிள்யூ. பி. சௌந்தரபாண்டியன், கரிமுத்து தியாகராசன், எம். சி. வீரபாகு, பி. அவுடையப்பா, வி. வி. ராமசாமி, எஸ் ராமசாமி ஆகியோர் அறிக்கை யொன்று வெளியிட்டுள்ளார்கள்.

அந்த அறிக்கையில்,அரசாங்கத்தார் வகுத்துள்ள மொழிப் படிப்புத் திட்டத்தின்படி தமிழ்நாட்டின் தாய்மொழியாகிய தமிழைக் கட்டாயப் படுத்துவதற்கு வழி ஏதும் வகுக்கவில்லை என்றும் இந்தி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைக் கட்டாயமாகப் பயிற்றுவிக்க இடமளிக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்திமொழியையும், சமஸ்கிருத மொழியையும் கற்பிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் தமக்கு ஆட்சேபணையில்லை என்றும், ஆனால், தாய் மொழிக்குப் பதிலாக இவைகளை வேண்டுமானால் படிக்கலாம் என்ற ஏற்பாட்டிற்குத் தாங்கள் ஒருபொழுதும் சம்மதிக்க முடியாது என்றும் உலகில் தோன்றிய பண்டைய மொழிகளில் தமிழ் ஒன்றுதான் இன்னும் 'கன்னி' மொழியாய், உயிருடனும் ஆக்கத்துடனும் நிலைபெற்றிருக்கிறது என்றும், இந்த நிலையைப் பாதுகாத்து, தமிழ் மொழியை மேலும் வளர்ச்சி அடையும்படி செய்யவேண்டுமென்றால், தமிழ்நாட்டின் கல்வித் திட்டத்தில் தமிழ்மொழி கட்டாயப் பாடமாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும்தமிழ்நாட்டில் தாய் மொழியாகிய தமிழ் கட்டாய மொழியாக இருக்கவேண்டிய தன் அவசியத்தைப் பல மேற்கோள்களுடன் காட்டியிருப்பதுடன், "இந்து" பத்திரிகையின் விஷமப் பிரசாரத்தையும், சென்னை கல்வி இலாகா டைரக்டரின் பொருத்தமற்றக் கூற்றுக்களையும் கண்டித்திருக்கிறார்கள், கல்வித்திட்டத்தில் தாய்மொழி கட்டாயப்பாடமாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம் என்றும், அரசாங்கத்தாரின் மொழித்திட்டம் அமுலுக்கு வந்தால் தாய்மொழியின் ஆக்கம் குன்றிவிடும் என்றும், கோயமுத்தூரில் சென்ற மேமாதத்தில் நடைபெற்ற தமிழ் மாநாட்டினில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் ஆதாரமாகக்காட்டி, அந்த அறிக்கையில் வெளியிட்டிருக்கும் கருத்து ஏதோ ஒரு சிறு கூட்டத்தாரின் கருத்து அல்லவென்றும், அது தமிழ்மக்களின் மிகமிகப் பெரும்பான்மையோருடைய எண்ணம் என்றும் துணிவுடன் தெரிவிக்கின்றோம் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேட்டூர் மின்சார சப்ளை

திருச்சி, ஜூலை 5—

மேற்குக்கரை குடகு பகுதிகளில் மழை பெய்திருப்பதாலும், மேட்டூர் நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் அதிகரித்திருப்பதாலும், மேட்டூர் மின்சாரம் சப்ளையாகும் பகுதிகளில் தற்போது 25 சதவிகிதம் ஏற்பட்டுள்ள மின்சாரக் குறைப்பு, சீக்கிரத்தில் எடுபட்டுவிடுமெனத் தெரிகிறது.

இந்தக் கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டாலும் கூட, மாலை 6 மணி முதல் இரவு 10 மணிவரையுள்ள அவசிய நேரங்களில் வைத் தொழில்கள், ஆஸ்பத்திரி முதலிய தொழிலகங்களுக்கு மின்சார சப்ளை கட்டுப்படுத்தப்படும். இன்று காலை மேட்டூர் நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 37 9 அடியாக இருந்தது.

பைகாரா, பாபநாசம் ஆகிய இரண்டு மின்சார சப்ளை நிலையங்களின் ஒரு வாரத்திற்கு முன்னரே கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டு அகற்றப்பட்டுவிட்டன.

சென்னை:—10—7—50 C. A. H. இந்து முஸ்லிம் உயர்தரப்பள்ளி தமிழ்க் கழகத் துவக்க விழாவில் தோழர் அண்ணாத்துரை சொற்பொழிவாற்றுவார்.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

9-7-50

பெரியக்கடை வீதி (திருச்சி):—டி. கே. சீனிவாசன், எஸ். எஸ். மணி, ஜி. பராங்குசம்.

காங்கயம்:—சி. பி சிற்றரசு,

பொள்ளாச்சி[illegible] [illegible]ி என் ராசு, கண்ணதாசன்.

11-7-50

செங்க[illegible] [illegible]. சிற்றரசு

கற்பனைக் காட்சி

மக்கள் மன்றம்

தப்பறிவோன்

உரையாடுவோர்:— கதர்சட்டைக்கார கந்தசாமி முதலியார் கண்டக்டர் கண்ணுசாமி, தொழிலாளி துரைசாமி ஆகியோர்

இடம்:— சென்னை பாரீஸ் கார்னருக்கும் புரசைவாக்கத்திற்குமிடையே ஓடிக்கொண்டிருக்கும் டிராம் வண்டி.

கண்டக்டர்:— சார், டிக்கெட்! டிக்கெட்!

துரைசாமி:— இந்தாப்பா, ஒரு சால்ட்கொட்டாய்கொடு..

கண்:—(காசைகையில்வாங்கிகொண்டு) இன்னொரு காலணா கொடப்பா.

துரை:— ஏன்?

கண்:— ஒரணா கொடுக்கணும்.

துரை:— என்னுப்பா...... இதோ இருக்கிற சால்ட் கொட்டாய்க்கு ஒரணாவா.... கு ... யிலேதானப்பா ஏறினேன்.

கண்:—அது சரிதாம்பா... அதுக்கு நான் என்ன செய்யறது? முக்காலணா பேரமே இடையாதே. ...தெல்லாம் போன மாசத்தோடே மலையேறிப் போச்சு.

துரை:— என்னுப்பா அநியாயமாயிருக்கே!

கண்:—அதுக்கு என்னுப்பா செய்யறது...யார் கேட்கிறது? காலமே அநியாய காலமாத்தானே யிருக்கு.

துரை:—(காசைக்கண்டக்டரிடம் கொடுத்துக்கொண்டே) சரி, கொடுத்துத்தொலை...... நல்ல சுயராஜ்யம் வந்துதப்பா........அட..........அடா எதைஎதெதாலும் இப்படியா! 8 அவுன்ஸ் அரிசி 7 அவுன்ஸ் சாயிடுத்து. சாமான் வெலையெல்லாம் ஏறிகிட்டேபோவுது. இதுக்குப் பேரு சுயராஜ்யமாம்! சுயராஜ்யம்!

(உடனே அருகிலிருந்த கதர் சட்டைக்கார கந்தசாமி முதலியார் குறுக்கிட்டு)

கந்:— சுயராஜ்யத்து மேலே என்னுப்பா குத்தம். மழையில்லே......காலா காலத்திலே மழை பெய்தாதானே...... அதுக்கு யார்தான என்ன செய்யமுடியும். பஞ்சத்தைச் சமாளிக்க ஏகாச்சும்செய்துதானே ஆகணும்.

துரை:—அட போங்க சார்.......பொல்லாத பஞ்சம் வந்துதே! பஞ்சமாம்!......பஞ்சம்! யாருக்கு சார் பஞ்சம்? இல்லே நான் கேட்கிறேன், யாருக்குப் பஞ்சம்! பஞ்சம் பஞ்சமின்னு சொல்றிங்களே, இந்த பஞ்சத்தாலே எந்த காரியம் கெட்டுப்போச்சு. பணக்காரன் வீட்டிலேயெல்லாம் சிரகச் சம்பா அரிசியல்லவா சாப்பிடுறாங்க....அதுமட்டுமா ஒவ்வொரு பணக்காரனும் 14 அவுன்சல்லவாசாப்பிடுறான்... கல்யாணம்காட்சியின்னு, ஆயிரக் கணக்கான பேருக்கு விருந்து வைக்கிறானே! இதையெல்லாம் யாரய்யா கேட்கிறு?

கந்:—அப்படிச் சொல்லப்படாது....சர்க்கார் அதையெல்லாம் கண்டுபிடிச்சு, அவுங்களுக்குத் தண்டனைகொடுத்துகிட்டுத்தானிருக்கு.....சும்மா சொல்லப்படாது...நடக்கிறது காங்கிரஸ் கவர்மெண்டு.

துரை:—(கந்தசாமியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு) ஆஹா! காங்கிரஸ் கவர்மெண்ட்! நம்ப கவர்மெண்ட்! ...மார் அடிச்சுக்க ரெண்டு கை போதாதே! போய் பாருங்கோ, அங்கங்கே என்ன நடக்குதுன்னு! போனமாசம் ராயப்பேட்டையிலே அந்த...ஒரு சினிமாகாரரு இல்லே......

கந்:—ஜெமினிகாரரா?

துரை:—ஆமாம்...ஆமாம்! அவுருவூட்டு கல்யாணத்திலே ரேஷனை எங்கே போச்சுன்னு கேட்கிறேன். விருந்து நடந்தது சார்! விருந்து! ஆயிர கணக்கிலே இலை விழுந்தது! யார் கேட்டா? பணக்காரன் வீட்டு கல்யாணமின்னு பஞ்சம், ரேஷன் இதெல்லாம் பஞ்சாப் பறந்துடுதே சார்! அவுங்களுக்கெல்லாம் யாரு தண்டனை கொடுத்தா...... என்னு கண்டனை கொடுத்தாங்கோ?

கண்:—தண்டனையா? யார் யாருக்குத் தண்டனை கொடுக்கிறது? மந்திரிகளே விருந்திலே கலந்துக்கும்போது வேரு யார் என்ன செய்யமுடியும்? எந்த ரேஷன் அதிகாரி அங்கே நுழையமுடியும்!

துரை:—உம்! அப்படிச் சொல்லு!

கந்த:—உஸ்! இந்தாப்பா வாய் புளிக்குதோ மாங்கா புளிக்குதோ பேசக்கூடாது. மந்திரிகள என்னதான் செய்வாங்க......ஏதைத்தான் செய்வாங்க

துரை:—ஐயோ! ஐயாவுக்கு எவ்வளவு கருணை காங்கிரஸ் மந்திரிகள் மேலே ஓகோ! நீங்க காங்கிரஸ்காரரே! சரிதான்...... அப்படித்தானே சொல்லுவிங்கோ. சரி, அதிருக்கட்டும்...என்ன செய்வாங்க மந்திரிங்க என்றீங்களே, பதவிக்கு வர்றத்துக்கு முன்னே அவுங்க பேசின பேச்சு மத்தம் சிங்காரவங்களே ஏசினதெல்லாம் உங்களுக்குத்தெரியுமா! அடா... அடா, அடா...நாங்க பதவிக்கு வந்தா ...லைக் கயிறு திரிச்சுடுவோம்...மலையை வில்லா வளைச்சுடுவோம்...மந்திரவங்களெல்லாம் தேசத் துரோ இங்கோ....வகுட்புவாதிங்கோ உம்! இன்னும் என்னென்னமோ பேசினுங்களே...புண்ணியவான்கோ. பதவிக்கு வந்து மூணு வாஷமாச்சே! எவனையா பலனைக்கண்டோம் விரலை மடக்குங்கோ பார்ப்போம்!

கண்:—அட அதிருக்கட்டும் சார், இவங்க எதையும் செய்யாட்டியும் தொல்லை கொடுக்காம இருந்தா போதுமே!

துரை:—ஆம்...அதுதானே இல்லை! கெடுபிடியல்லா பண்ணுங்க. தொழிலாளிங்க, வயத்துக்குப் பத்தலே கொஞ்சம் கூலியை உயர்த்துய்யாண்ணு முதலாளியைக் கேட்டா... உடனே அவனை, கம்யூனிஸ்டுன்னுசொல்லி புடிச்சு உள்ள த... வழியல்லா தேட ரு...

...சரி...சரி போம்பா, ...சங்கம். உங்களப்போல ஆசாமிகளோடு பேச சம்மால முடியாது

துரை:—ஆமாம் எப்படி முடியும். பேச விஷயமிருந்தாகானே! காங்கிரஸ்காரர்கள் பேச்சலாம் தேர்தல் காலத்தோடே சரி

கந்:—இதென்னப்பா நீ பேசாது வேடிக்கையாயிருக்கு...சர்க்கார்தான் என்ன செய்யும் மெள்ள மெள்ளதானே செய்யணும்.

துரை:—ஆமாம்...மெள்ள மெள்ள செய்வாங்க...வருஷம் மூணாச்சு இவங்க வாழவந்து. அதுக்குள்ள இவ்வளவு கூத்து நடக்குதப்பா...! இனிமேதான் வாழப்போவுதாம்! போங்க சார், வீணு வயித்தெரிச்சலைக் கௌப்பாதிங்க. இவங்ககிட்ட நாட்டை ஆளறதுக்கு நல்ல திட்டமில்லே...ஆள வழிவகை தெரியலேன்னு சொல்லுங்கோ ஒப்புக்கொள்றேன்.

கந்:—சார், சார்! அப்படி கூட சொல்லுறதுக்கில்லே சார். அவுங்களுக்கு எல்லாம் தெரியும். திட்டமிருக்கிறது: ஆனல், அந்தத்திட்டம் உங்களைப்போல, என்னைப்போல ஏழைகளை வாழ வைக்கிறதிட்டமில்லே...முதலாளிமார்களை மேலே மேலே கொழுக்க வைக்கிற திட்டமிருக்கு. அதனாலேதான்அவங்க அவ்வளவு கெடுபிடி பண்றதும் நாம் அவஸ்தைபடறதுமா யிருக்கு

துரை:—ஆமாம்பா நீ சொல்லறதும் நெசந்தான். எதாச்சும் நல்ல நோக்கமிருந்தா எதைத்தான் செய்யமுடியாப் பூடும்.

(வண்டி சால்ட்கோட்டஸ் வந்ததும்)

சரி, நான் போயிட்டுவர்றேன். (கந்தசாமி முதலியாரைப் பார்த்து)

சார், கோச்சுக்காதிங்க, ...மேலே ஏனகொண்ணு கோவமில்லே, நீங்களும் நானும் ஒரேமாதிரிதான் நானும் உங்களைப் போல பெரிய காங்கிரஸ்காரனு இருந்தவன்தான். இப்போ, நா... நெலமை என்னை மாத்திடுத்து. அவ்வளவுதான்.

கண்:—சரி, போயிட்டு வாப்பா; இன்னும் கொஞ்ச நாள் போறு. ஐயாவும் நம்ப வழிக்குத்தான் வருவாரு.

(துரைசாமி வண்டியைவிட்டிறங்கிப்போகிறர்)

நண்பர்களுக்கு ஓர் நாடக விருந்...

'திராவிடன்' வார இதழ் ...
உதவி நிதி நாடகம்

9-7-50 ஞாயிறு மாலை 6-ம...

சென்னை ஒற்றைவாடை தியேட்ட...

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி
தோழர் சி. என். அண்ணாத்துரை

ஈ.வெ.கி. சம்பத், டி. எம். மருதப்பா, டி. வி. நார... எம் என். கிருஷ்ணன், ராஜேந்திரன், சி. வி. ரா... மகாலிங்கம், ஈழத்து அடிகள், கிருஷ்ணமூர்த்தி, ... தில்லை-வில்லாளன் ஆகியோர் நடிக்கு...

சந்திரமோகன்

(பல புதிய காட்சிகள் அமைப்புகளுடன்)

கட்டணம்:—ரூ. 5, 3, 2, 1,

எவரையும் இலவசமாக அனுமதிக்கப்படமாட்டாது

நாடக தினத்தன்று தியேட்டரில் காலை 9-மணி முதல் டிக்கட்டுகள் விற்கப்படும்.

சத்தியவாணிமுத்து, காஞ்சி மணிமொழியார்,
அமைப்பாளர்கள்.

தீக்கிரை!

மதுரை, ஜூலை 5—

திருப்பரங்குன்றத்தில் இன்று அதிகாலையில் ஏற்பட்ட ஓர் தீ விபத்தில் 120 குடிசைகள் நாசமாயின. நஷ்டம் 7000 ரூபாய் இருக்குமென்று மதிப்பிடப்படுகின்றது. தீக்குக் காரணம் தெரியவில்லை.

இன்று காலை அதேபோது நாகிபட்டி கிராமத்தில் தீ விபத்து ஏற்பட்டது. இதில் 75 குடிசைகள் நாசமடைந்தன. நஷ்டம் 7000 ரூபாய் இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது.

"கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா" வழக்கு

சென்னை, ஜூலை 6—

கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா" வழக்கில் எதிரிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

[விவரம் பின்னர் வரும்]

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

	ரூ. அ. பை
முன்வரவு	3329 0 9
தி. மு. க. ஏழுகிணறு கிளை (10-வது வட்டம்)	15—0—0
தி. மு. க. திருவல்லிக்கேணி கிளை	25—0—0
சர். பி. தியாகராயர் நினைவு நாள் பொதுக்கூட்ட நிதி உண்டியல் வசூல்	25—7—0
வி. டி. பெரியசாமி, சென்னை	15—0—0
கிழவிராணம் ஜானகிராமன், சேப்பாக்கம்	1—0—0
தி. மு. க. பெரியகுளம் கிளை	10—0—0
எஸ். லெக்ஷ்மண (அய்யர்), அருவிக்காடு மூணர்	1—0—0
டி. கடாக்ஷம், ,,	1—0—0
எஸ். சண்முகம் (பிள்ளை) ,,	3—0—0
எஸ். மலக்கணி, ,,	2—0—0
பி. கந்தசாமி, ,,	1—0—0
எஸ். அருணசலம், ,,	1—0—0
முத்துசாமி, ,,	1—0—0
குட்டப்பன், ,,	1—0—0
சாமுவேல், ,,	1—0—0
சோமன், ,,	1—0—0
இதர வசூல், ,,	10—0—0
நிலக்கோட்டை தி. மு. இளைஞர் கழகம் ,,	5—9—0
	3449 0 9

"அண்ணா... சகாப்தமிது"

யாகப்பாவில்
கருணாநிதிக்குப்பாராட்டு

2—7—50 மாலை 5 மணிக்... தஞ்சை பாகப்பாடசாலையில், இ... டர் உள்ளையானா தோழ... ஏன். பரிசுத்தம் ... 'மந்திரி குமாரி' நிலை... வாணம் தீட்டிய தோழர் ... கிக்கு ஒரு பாராட்டுவிழா ... நப்பட்டது. மாலை 5 ம... தேநீர் விருந்தளிக்கப்பட்டது... னர், தியேட்டரில் நட... சேர்த்தில் தோழர் கருணாநி... அறிமுகப்படுத்தி பரிசுத்தம் ... ன் அவர் திறந்த்தினைத் பாராட்... பேசினர். தோழர் கருணாநி... நன்றிகூறும் முகத்தான், ... சொந்தக்கலவென்... ...,லீடியோ ... தமன் கடமையை... செய்யவொன்றும்—... தோழர் டி. ஆர். ... ... முழு ஒத்துழைப்பும், ...ம் பட்டதின் வெற்றிக்கு... ... ஒன்று ... தமிழ்நாட்டு ... இ... தியேட்டர்களில் ... ... அதிருப்தப்படுத்தும் ... யிருந்தது. ஆனல், ... அறிமு... ... ஆரம்பிக்கப்பட்... இரதுடு. இது ... ... பண்ணிவது தோழர் ... தலையில் ... எழுந்தாளன—மு... மேடையில் ... சேவல் புரிந்த ... அவர்கள், நன்றி... கூறினர்,

இரவு 10 ம... விருந்தொன்...

சென்னை ... பட்...

செ... ... பட்டமளி... 18, 19 ... 4-30 மண... என அற...

...வைத்திய ...ம்

...ணம், ஜூன் 2— ...பொதுக் கூட்டம் ...லை ஆடக்கோடவுன் ...ர் எஸ். வி. ஜெகன் ...மையில் நடைபெற்றது. ...செயற்குழு ஏகமன...ய் ஆண்டிற்குத் தேர்ந்...ட்டது.

...ராணி. வி. வெங்கடா...வி. பசுபதி, எஸ். வி. ஜெகன் ...ர், மணி, பி. ஆர். மூர்த்தி, ...அப்துல் ஹமீது. செயலாளர் ...தோழர் ஆர். என். மணியை ...க்கப்பட்டது. ரிஜிஸ்டராகாத ...வைத்தியர்களுக்கு சட்டசபை மெம்பர்களுக்கும், மற்ற சங்கங்களுக்கும், ...ரித்து அனுப்பவும் வேண்டு...கொள்ளவும், சட்டசபையில் ...வைத்தியர்களுக்கு 2 ஸ்தானங்கள் ...ஒதுக்கித் தர வேண்டுமென, கவர்னர், மந்திரிகள் முதலானோருக்குத் ...தயாரித்துள்ள விண்ணப்பங்கள், ...அவின் சம்பந்தமாக வைத்தியர்...களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களை ...விளக்கி சென்ட்ரல் போர்டுக்கு ...அனுப்பியிருக்கும் அறிவிப்பு ஆகிய...வற்றை, செயலாளர் கொண்டுவ...ஏகமனதாக அனைவராலும் ஒப்புக் ...கொள்ளப்பட்டது.

இச்சங்கத்தின் முயற்சிகளைப் ...பற்றி மற்ற சங்கங்கள் ஒப்புக் ...கொண்டும் பாராட்டியும் வந்துள்ள ...கடிதங்கள் படிக்கப்பட்டன.

தலைவர் முடிவுரையில் கழ...ரிஜிஸ்டர் சம்பந்தமான அவசி...யத்தை வற்புறுத்தியும் அதற்கு ...வேண்டியன செய்யக் கேட்டுக்கொண்...டும் செயலாளரால் இதுவரை ...செய்யப்பட்டுள்ள முயற்சிகளைப் ...பாராட்டியும், மற்ற கழகங்கள் ...வைத்திய...க்கு முக்கியமாக பாடு...பட்டு ...கழகம் வைத் ...தொழிலாளர் ...வரால் எல்லா வைத்...தியர்களும் இக்கழகத்தில் உறுப்...பினராகக் கேட்டுக்கொண்டபின் ...கூட்டம் ...ற்றது.

...டம் வளரும் புலிக்குட்டிகள்

பிரிட்டோரியா, ஜூலை 7— ...பிரிட்டோரியா உயிர்காட்சி சாலை...யில், ஒரு நாயின் பாலையுண்டு ...புலிக்குட்டிகள் வளர்ந்து ...வருகின்றன.

இப்புலிக்குட்டிகள் ...அதன் ...தாய் ...விட்டு போய் ...தாகவும், அன்று முதல் ...நாய்க்குட்டிகளுடனேயே ...வளர்ந்து வருவதாக கூறப்...படுகிறது. —ருனோப்

பாலஸ்தீன மத்யஸ்தவேலை

...டமாஸ்கஸ், ஜூலை 7— ...பாலஸ்தீன பிரச்னை விஷய...மாக ...ஜெருசலத்தில் எல்லை ...யம் பற்றி தகராறு ஏற்...பட்டபோது, இன்னும் சமா...தானமாக தீர்த்துவைக்க ...காரியதரிசி தோழர் ...லியின் அந்தரங்க ...தோழர் ...டியர் ...முயற்சிசெய்து வரு...

...நாடுகளின் பிர...லாம் கண்டு...

...டையில் ...காசம்

..., ஜூலை, 7— ...த்தில் பி... ...வில் ஒரு ...ரசம் செய் ...யில் இது ...க்கப்பட்டுள்ளது. —ருனோப்

இனி நடப்பவை

ஆயிரம் விளக்கு, சென்னை:— 9-7-50 காலை 9-30 மணிக்கு, கராண்மைக் கழக ஆண் பள்ளியில் திருக்குறளில் "வான் சிறப்பு" என்ற அதிகாரம் பற்றி, தோழர் அ. திருமலை அவர்களால் விரிவுரை ஆற்றப்படும்.

ஃ ஃ ஃ

ஞானி:— தோழர் க. தங்கவேலன் பி. ஓ. எல். (ஆனர்ஸ்) "திருக்குறளில்-வெகுளாமை" என்பது பற்றிச் ஞானி, வாத்தியார் கந்தப்பிள்ளைத்தெரு, கராண்மைக் கழகப் பள்ளியில், 9-7-50 ஞாயிறு காலை 10 மணிக்குப் பேசுவார்.

ஃ ஃ ஃ

மாயவரம்:— நகர தி. மு. கழக செயற்குழுக் கூட்டம், 10-7-50 மாலை 6 மணிக்குக் கழகக் கட்டடத்தில், தோழர் வை. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

திண்டுக்கல்:— 9-7-50 அன்று காலை 10 மணிக்கு, திராவிட மாணவர் முன்னேற்றக் கழக செயற்குழு கூட்டம், நாடார் சந்து 2-ம் நெ. இல்லத்தில் நடைபெறும்.

ஃ ஃ ஃ

திருத்தங்கல்:— 9-7-50 சோலையப்பன் உணவு விடுதியில் மாலை தி. மு. கழக மாதாந்திர கமிட்டிக் கூட்டம் நடைபெறும். அதுபோது வரவு செலவு கணக்கு பார்க்கவேண்டியிருப்பதால், அவசியம் அங்கத்தினர்கள் கமிட்டி உறுப்பினர்கள் தவறாது வரவேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஃ ஃ ஃ

மணக்குடி:— "அன்பு மறுமலர்ச்சி மன்ற" திறப்புவிழா 9-7-50 மாலை 7 மணிக்கு நடைபெறும். மன்றத்தை தோழர் இரா. ச. தம்பாமும் திறந்து வைப்பார். மற்றும் அன்றிரவு நடக்கும் பொதுக் கூட்டத்திற்கு தோழர் எம். எஸ். சிவசாமி, நாகர்கோவில் தோழர் சே. குஞ்ஞன் பேசுவர்.

ஃ ஃ ஃ

பொள்ளாச்சி:— தி. மு. க. பொதுக்கூட்டம் 9-7-50 மாலை 6-30 மணிக்கு தேர்நிலையில் நடைபெறும். தோழர்கள் கோவை ஜி. என். ராசு, கண்ணதாசன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஃ ஃ ஃ

மதுரை தெற்குமாசிப்பேட்டை:— தி. மு. இளைஞர் மன்ற செயற்குழு கூட்டம் 9-7-50 காலை 10-மணிக்கு அண்ணாத்துரை இலவச படிப்பகத்தில் சே. எஸ். ராஜமான் தலைமையில் நடைபெறும். செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வரவேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பர்மா போவோர்

கல்கத்தாவில் நிறுத்தப்பட்டனர்

கல்கத்தா, ஜூலை 5— பர்மாவுக்கு பிரயாணமாகி போய்க்கொண்டிருந்த சுமார் 100 தென்னிந்தியப் பிரயாணிகள், கல்கத்தாவில் நிறுத்தப்பட்டனர். ஜூலை முதல் தேதி முதல் பர்மா சர்க்கார் பிறப்பித்திருக்கும் சட்டப்படி பர்மாவுக்குவரும் பிரயாணிகள் இந்திய சர்க்காரிடமிருந்து பாஸ்போர்ட் பெறவேண்டுமென்றும், அவ்வாறு பெறாதவர்களுக்குக் கப்பல், விமானக் கம்பெனிகள் டிக்கட் கொடுக்ககூடாதென்றும் ஒரு ஷரத்து காணப்படுகிறது.

பின்னர், இந்தப் பிரயாணிகள் பர்மா சர்க்காருக்குத் தந்தி மூலம் மனுச்செய்து கொண்டிருக்கின்றனர்.

கனல் தெறிக்கும் வசனம்
அனல் தெறிக்கும் நடிப்பு
மாடர்ன் தியேட்டர்ஸ்....
மந்திரி குமாரி
டைரக்ஷன் · கதை வசனம்
டி. ஆர். சுந்தரம் & எல்லிஸ் ஆர். டங்கன்........ கருணாநிதி.......
......சென்னை......
பாரகன் & பிராட்வே
மற்றும் தமிழ்நாடெங்கும் நடைபெறுகிறது........
......தினசரி 3 காட்சிகள்........
BAKTHA

வேண்டுகோள்

தி. மு. கழக கிளைக் கழக செயலாளர்கள் அனைவரும், ஆங்காங்கே இதுவரைநிறுவப்பட்டுள்ள கிளைக் கழகங்களின் விவரத்தை, முகவரியுடன் தெளிவாக அறிவிப்பதோடு, கழகத் துவக்க முதல் இன்று வரை, கழகச் சார்பில்நிகழ்ந்த கூட்டங்களின் விவரம்—நிகழ்ந்த இடம், தேதி, தலைமை தாங்கியவர் உட்பட, பேசியவர்களின் பெயர் முதலான குறிப்புகளுடன்—உடன் அறிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், தி. மு. கிளைக் கழகங்கள் நிறுவப்படாதுள்ள இடங்களில் மிகவிரைவில் நிறுவப்படுவதற்கான வகையில் செயலாற்றவும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொதுச் செயலாளர்

மேற்கு ஜெர்மனியில் எஃகு உற்பத்தி

டஸல்டார்ப், ஜூலை 7— மேற்கு ஜெர்மனியில் எஃகு உற்பத்தி மிகவும் அதிகரித்திருப்பதாக இங்கு தகவல் கிடைத்திருக்கிறது.

வட ஆர்க்காடு மாவட்ட தாழ்த்தப்பட்டோர் கழகம்

குடியாத்தம், ஜூலை 5— நேற்றுமாலை 4 மணிக்கு வ. ஆ. ஜில்லா தாழ்த்தப்பட்டோர் கழக செயற்குழு கூட்டம் இங்கு தோழர் எம். ஆதிமூலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சமீபத்தில் மேற்படி ஜில்லா பெடரேஷன் இப தலைவர் தோழர் எம். லோகநாதனுடைய மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும் வட ஆற்காடு ஜில்லாவில் அரக்கோணம், குடியாத்தம், வாலாஜா, வேலூர் தாலுக்காக்களில் மேல் ஜாதி இந்துக்கள் தூண்டுதலின்பேரில் தாழ்த்தப்பட்ட மக்களின் மீது போலீசார் தொடுத்திருக்கும் ஜாமீன் கேஸ்களை வாபஸ் பெறும்படி சர்க்காரை இக் கமிட்டி கேட்டுக்கொள்கிறதென்றும், வருகிற மாதம் நடைபெறப்போகும் குடியாத்தம் தாலுக்கா உப தேர்தலில் (எம். எல். ஏ.) சம்மேளனம் போட்டியிடுமென்றும் இதற்கு எல்லா கட்சிகளும் விட்டுக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அன்று மாலை ஆற்றில் பெடரேஷன் பொதுக்கூட்டம் தோழர் எம். தனபால் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ...சாமி, ...ம். ஆதிமூலம், ...மான் ...வி. தாஸன் முத... சொற்பொழிவாற்றி...

மணமகன் தேவை

மாதம் 80 ரூ வருமானமுள்ளவரும், எழுத்தாளரும், 25 வயதுள்ள வருமான ஒருவருக்கு எந்த வகுப்பையும் சேர்ந்த ஒரு பெண்தேவை.

K. வடமலை,
14, ரங்கநாதபுரம் தெரு,
சென்னை-4

ஏஜெண்டு தோழர்கட்கு

9-7-50-க்குள் பட்டியல பாக்கியை அனுப்பத்தவறும் ஏஜண்டு தோழர்கட்கு பத்திரிகை அனுப்பப்படுவது உடனே நிறுத்தப்படும் என பதைவருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

மானேஜர் "மாலை மணி"

பாம்புகள் பறக்கின்றன

கல்கத்தா, ஜூலை 6— கனடாவில் உள்ள அலாஸ்காவுக்கு கல்கத்தாவிலிருந்து 4 மலைப் பாம்புகள் விமானத்தில் அனுப்பப்படுகின்றன. இவை ஒவ்வொன்றும் 12 அடி நீளம் உள்ளது. இவைகளுடன் அதிக விஷமுள்ள இதர பாம்புகளும் அலாஸ்காவுக்கு அனுப்பப்படும்.

அலாஸ்காவில், காட்டு மிருக வியாபாரி ஒருவர் இந்தப் பாம்புகளை வாங்கி விமானத்தில் அனுப்புகிறார்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St.